மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 519. திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

519—

காரங்குடாவில் மீனவர் கூட்டுறவு சங்கம் அமைத்தல்

***46707**—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடாவில் தனியாக கூட்டுறவு மீனவர் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார். மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கடலோரப் பகுதியான காரங்குடாவில் சுமார் 200 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சம்பை பட்டணம் என்ற ராவிஸ்தாவின் மீனளத் துறையினுடைய மீனவர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அந்த சங்கம் டிபால்ட் ஆனதினால் கடன் பெற முடியவில்லை. ஆகவே, இந்த காரங்கொடா கழுமங்கொடா பகுதியில் இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டுறவு மீனவர் சங்கத்தை அமைத்தால், அந்த மீனவர்கள் கடன் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால் தான் இந்தக் கேள்வியே நான் தொடுத்திருந்தேன். அதை மீண்டும் அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1957-ஆம் ஆண்டு முதல் கழுமங்கொடா மற்றும் காரங்கொடா

கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே 1958-ஆம் ஆண்டிலிருந்து பெற்ற கடனை அடைத்த ஒரே தலைவர் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான். அப்படி இருக்கும்போது அவர்கள் இந்த சங்கத்தின் மூலமாக கடன் வாங்கி விட்டு வாங்கிய கடனிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக இன்னொரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து இப்படியே போய்க் கொண்டேயிருந்தால் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை தான் அதிகமாகும். எனவே, இதை சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை என்றே நான் கருதுகிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் கடன் கட்டவில்லை என்பதை நான் முன்பே சொன்னேன். ராவுத்தானில் என்ற சம்பை பட்டணம் கூட்டுறவுச் சங்கம் எனப்படும் இதில் காரங்கொடாவில் இருக்கின்ற ஒருவர் கூட கடன் பெறவில்லை, இதுவரையில், இவர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்களே தவிர ஒருவர் கூட கடன் பெற முடியவில்லை. ஆகவே தான் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை தனியாகப் பிரித்துக் கேட்கிறார்கள். அவர்கள் போராட்டங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நான் சமாதானம் செய்து நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும்போது சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பி எப்படியாவது தீர்வு காண்பேன் என்று உறுதி கொடுத்தேன். ஆனால், மீனவர்களுக்காக தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்தியாவிலேயே மிகச் சிறப்பான முறையில் செயலாற்றி மீனவர்களைப் பாதுகாக்கின்ற அரசாக நம்முடைய தமிழக முதல்வர் தானைத் தலைவி தங்கத் தலைவி புரட்சி தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியில் மீனவர்களைப் பாதுகாக்கின்ற அரசாக இருக்கிற காரணத்தினாலேதான் இதை இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காரங்கொடா பகுதிக்கென்று ஒரு கூட்டுறவு சங்கம் வேண்டும் என்றாலும் கூட அதற்கு ஒரு யோசனையாக, கழுமங்கொடா காரங்கொடா என்று ஒரே கடல் மீனவர் கூட்டுறவு சங்கமாக இருக்கிற காரணத்தினாலே அந்தச் சங்கம் கூடி தீர்மானம் இயற்றி, அந்த தீர்மானத்தின் அடிப்படையிலே காரங்கொடா பகுதிக்கு ஒரு தனி சங்கமாக அமைப்பதற்கு யோசனை செய்யலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 520, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சுதர்த் துறை அமைச்சர்.